***கவனிக்க.*** *-2024.03.01 ஆந் திகதிய 2374 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2375 - 2024 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.07

*2375 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 28 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 30 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*.

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


27 - B 082547- 353 (2024/03)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

1. தசநாயக்க முதியன்செலாகே லுவிநோனா ( காலஞ்சென்றவர்)
1. (A) அமரசிங்ஹ முதலிகே ஸ்ரீமதி அமரசிங்ஹ,
(B) அமரசிங்ஹ முதலிகே ஸ்ரீமதி அமரசிங்ஹ, இருவரும் இல. 272/3, சுதர்ஷன மாவத்தை, மாலபே.

வழக்கு இலக்கம்:
14999 / P

வாதி

- எதிராக -

01. ஏ.எம்.ஹென்றி எட்வர்ட் ( காலஞ்சென்றவர்),
இல. 84/1, ஏ . ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13.

01. அ. ஏ. எம். க்லேரன்ஸ் ஜானக ( காலஞ்சென்றவர்),
இல. 82, ஏ . ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13.

01. (A) அமரசிங்ஹ முதலிகே ட்ரிக்சி ஜானக,
இல. 271/50, ரொஸ்டா கார்டன்ஸ், கெரவலப்பிட்டிய, ஹெந்தல, வத்தளை.

02. லியனகே பிரின்ஸி, இல. 287, கொதலாவல , கடுவளை.
தற்போது , இல. 261/4/3, விமுக்தி மாவத்தை, பிட்டுகல, மாலபே.

03. லியனகே ஜோயிஸ், இல. 84/1, ஏ. ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு 13.
தற்போது, இல. 163/61, விமுக்தி மாவத்தை, பிட்டுகல, மாலபே.

04. ஹேவகே அலெக்ஸான்டர் பெரேரா ( காலஞ்சென்றவர்),
இல. 85, ஏ. ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு 13.

04 (அ) ஹேவகே மஹேஷ் நலின் பெரேரா, இல. 84/1, ஏ. ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு 13.

05. ஹேவகே மார்க்ரட் பெரேரா ( காலஞ்சென்றவர்), இல. 85, ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை,
கொழும்பு 13.

05. (அ) அ. ஏ.எம். க்லெரன்ஸ் ஜானக ( காலஞ்சென்றவர்),
இல.82, ஏ .ஜி.ஹின்னிஅப்புஹாமி மாவத்தை, கொழும்பு -13.

05 (A) ஜயலத் யக்கல முல்லகே இனிட் ஜசிந்தா தி சில்வா,
இல.272/52, ரொஸ்டா கார்டன், கெரவலப்பிட்டிய வீதி, ஹெந்தளை, வத்தளை.

06. ஹேவகே சிறில் பெரேரா, இல. 268/1, தளுபிடிய, கடவத்தை.

07. ஹேவகே அலோசியஸ் பெரேரா ( காலஞ்சென்றவர்),

07 (A) முல்லகந்த ஆரச்சிகே மேரி பிரிட்ஜட், W1, தவடகஹவத்தை, கொங்கிதொட, வத்தளை.

08. ஹேவகே ஜோசப் பெரேரா ( காலஞ்சென்றவர்)
இல. 01, தவடகஹவத்த, கொங்கிதொட, வத்தளை.

08 (அ) விக்ரமசிங்ஹ முதியன்செலாகே பிரிட்ஜட்,
இல. 01, தவடகஹவத்த, கொங்கிதொட, வத்தளை.

08 (A) ஹேவகே புத்திக பிரசாத் பெரேரா, இல. 55, பாடசாலை பின்புறம், கொங்கிதொட, எந்தேரமுல்லை,
வத்தளை.

09. எஸ். ஏ. நாகராஜா,
இல. 84, ஏ.ஜி. ஹின்னிஅப்புஹாமி மாவத்தை, கொழும்பு 13.

10. ரனிரேசன் நடராஜா, இல. 84, ஏ.ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு 13.

*எதிராளிகள்*

மேற்படி இலக்கம் கொண்ட வழக்குடன் தொடர்பான காணிக்கு மற்றும் அமைவிடத்திற்கு மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட வழக்காளிகளுக்கு மற்றும் எதிராளிகளுக்கு குறித்த வழக்கில் அறிக்கையிடப்பட்டுள்ள 2003.09.03 ஆந் திகதி கொண்ட தீர்வின் படியாக அதில் காட்டப்பட்டுள்ள பிரிவின் படியாக உரித்து உள்ளது என்றும், குறித்த தீர்வு பிரகடனத்தில் மிகவும் பரிபூரணமான விபரத்துடன் குறித்த காணி மற்றும் அமைவிடத்தின் பாகம் பிரிவினை வழக்குச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் படி விற்பனை செய்யப்பட்டு கிடைக்கப்பெறும் தொகை வழக்கில் வைப்பிலிடப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது என்பதுடன் இங்கு கீழுள்ள அட்டவணையில் விபரமாக காட்டப்பட்டுள்ள காணி மற்றும் அமைவிடம் கௌரவ நீதிமன்றத்தின் ஊடாக அனுமதிக்கப்பட்டுள்ள விற்பனை ஒப்பந்தங்களின் கீழ், குறித்த வழக்கிலிருந்து எனக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை அதிகார பத்திரத்தின் அதிகாரத்துடன் 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு குறித்த ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேற்படி கூறப்பட்ட பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகர சபை அதிகார எல்லைக்குள் எச். டி. டயஸ் பகிரங்க அளவையாளர் அவர்களினால் 1916.05.17 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1822 எனும் வரைபடத்தின் படியாக புதிய செட்டித்தெரு வரி இலக்கம் 67,68 எனும் ஆதனம் (09.25பேர்ச்) விசாலமான 'சீ ' பிரிவுக்கான எல்லைகள் வடக்காக : வென்ரொயன் பாதைக்கு ஒதுக்கப்பட்ட பிரிவும்; கிழக்காக: எச். பெரேராவின் இல. 9ஏ எனும் காணி ( தற்போது வென்ரோயன் வீதி) யும் ; தெற்காக: ஜே.குணமுத்துவின் இல. 69 எனும் காணியும்; மேற்காக : மரிய பெரேராவின் காணி.

**மேற்படி கூறப்பட்ட காணி ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகர சபை அதிகார எல்லைக்குள் என்.டீ.ஜே. வீ.பெரேரா அனுமதிபெற்ற அளவையாளரினால் 1991.07.28 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல.12159 எனும் வரைபடத்தின் பிரகாரம் ஏ.ஜி.ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள வரி இலக்கம் 82, 82ஏ, 82பீ, 84 மற்றும் 86 எனும் 09.60பேர்ச். விசாலமான காணிக்கான எல்லைகள் - வடக்காக: ஏ.ஜி. ஹின்னிஅப்புஹாமி மாவத்தையும்; கிழக்காக: எச்.பெரேராவின் இல. 9ஏ எனும் காணி ( தற்போது வென்ரோயன் வீதி) யும்; தெற்காக : ஜே. குணமுத்துவின் இல. 69 எனும் காணியும்; மேற்காக: மரிய பெரேராவின் காணி.

**ஆதனத்தினுள் நுழைதல்**: கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின்அண்மை தொட்டு நீர்த்தாங்கி வீதியில் 1 கிலோ மீற்றர் அளவு செல்லும் போது ஏ.ஜி.ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் இடப்புறமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை**: ஏலம் முடிவுற்றதும் உடனடியாக கொள்வனவாளரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட்ட தொகையில் செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1. கொள்வனவாளரினால் விற்பனை விலையில் 25% அவ்வாறே செலுத்தப்படல் வேண்டும்;
2. சிவில் வழக்கு கட்டளைக்கோவையில் 258 பிரிவின் கீழான அறவிடலும்;
3. உள்ளூராட்சிக் கட்டணமாக 1% ;
4. எஞ்சிய 75% தொகை ஏலமிட்ட தினம் தொடக்கம் 30 நாட்களுக்குள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கிற்கு வைப்பிடப்படல் வேண்டும்;
5. அனைத்து செலவுகளும் கொள்வனவாளரினால் ஏலம் முடிவுற்றதுமே செலுத்தப்படல் வேண்டும்;

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

பதிவாளர்/ பிரதி பிசுக்கால்/
மாவட்ட நீதிமன்றம்,
கொழும்பு.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,
2024 , பெப்புருவரி 22 .

03- 143

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் ( கொழும்பில் உள்ளது) அதன் சிவில் நீதிமன்ற அதிகார வரம்பை செயற்படுத்துவதில்

வழக்கு இலக்கம்: CHC/ 02/ 2024/CO
தன்மை: கணக்குகளை தீர்த்து முடிவிடுதல்

கொழும்பு 02, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, 02 ஆம் இலக்கத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள நோர்த் செவன் டிரேடிங் ( பிரைவட்) லிமிடட் தொடர்பான விடயத்தில் ,

*மற்றும்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(உ) அல்லது /மற்றும் (ஊ) அத்தியாயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நோர்த் செவன் டிரேடிங் ( பிரைவட்) லிமிட்டை நீதிமன்றத்தின் ஊடாக கணக்குகளைத் தீர்த்து முடிவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் தொடர்பில்.*

நோர்த் செவன் டிரேடிங் (பிரைவட்) லிமிடட், இல. 02, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு -02.

*மனுதாரர்*

*கொழும்பில் உள்ள மற்றும் சிவில் நீதிமன்ற அதிகாரத்தை செயற்படுத்தும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தின் ஊடாக மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர் நிறுவனமான நோர்த் செவன் டிரேடிங் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தை மூடி விடுவதற்கான மனு மேற்கூறப்பட்ட மனுதாரரால் 2024,சனவரி மாதம் 12 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அந்த மனுவை 2024, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது என்பதுடன் உத்தரவை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்படி நிறுவனத்தின் பங்களிப்புக் கடனாளிகள் எவரும் மேற்படி மனு மீது விசாரணையின் போது நேரிலோ அல்லது அவரது சட்டத்தரணி அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ அந்த நோக்கத்திற்காக ஆஜராகலாம். மேலும் மனுவின் நகல், குறிப்பிட்ட நிறுவனத்திற்கு தேவைப்படும் கடன் வழங்குபவருக்கு அல்லது பங்களிப்பாளருக்கு, அதற்கான பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தியவுடன் கீழே கையொப்பமிடப்பட்டவரால் வழங்கப்படும்.*

*தினுஷா மிரிஹான,*
*மனுதாரருக்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,*
*இல. 10/6/3, கந்தேவத்த டெரஸ், நுகேகொடை.*

***குறிப்பு**: மேற்கூறிய மனுவின் விசாரணையில் ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும், மனுதாரருக்காக மேலே பெயரிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிக்கு விருப்பத்தை தபால் மூலம் அனுப்பவேண்டும். அல்லது அவ்வாறு செய்ய வேண்டும் என்பதை எழுத்துபூர்வமாக அறிவிக்க வேண்டும். அறிவிப்பில் நபரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும்.அல்லது நிறுவனம் என்றால் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி மற்றும் நபர் அல்லது நிறுவனம் அல்லது அவரது சட்டத்தரணி (ஏதேனும் இருந்தால்) கையொப்பமிட்டு நேரடியாக ஒப்படைக்க வேண்டும் அல்லது 2024, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று மாலை 5.00 மணிக்கு முன் (மாலை 5.00 மணி) மேலே பெயரிடப்பட்ட பெயரைச் சென்றடைய போதுமான நேரத்தில் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.*

*தினுஷா மிரிஹான,*
*மனுதாரருக்கான சட்டத்தரணி.*

*03- 125*

## த குட்நஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

செயிட் அலி ஸாஹிர் மௌலானா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "த குட்நஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) பல்கலைக்கழக பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டமொன்றையும் அவர்கள் தொழிற்சந்தைக்கு உகந்த முறையில் தம்மை ஆயத்தம் செய்துகொள்ளத் தக்கதான முறையில் விரிவுரைகள், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்;

(ஆ) மூத்த பிரசைகளுக்காக பல்தரப்பட்ட உதவித் திட்டங்களை அமுல் செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்துகொடுத்தல்;

(இ) வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர்கள், யுவதிகளை சுய தொழில்களுக்காக ஊக்கமூட்டி அவர்களுக்குத் தேவையான உதவிகள், ஒத்தாசைகள் மற்றும் பயிற்சிகளை அளித்தல்,

பிறவும்.

செயிட் அலி ஸாஹிர் மௌலானா,
பாராளுமன்ற உறுப்பினர்.

03- 126